நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**குறுவை நெல் சாகுபடி முனைப்பு முகாம் இன்று தொடக்கம்**

First Published : 06 Jun 2011 12:23:17 PM IST

அரியலூர், ஜூன் 5: அரியலூர் மாவட்டம், ஜயங்கொண்டம் பகுதியில் உள்ள கிராமங்களில் குறுவை நெல் சாகுபடிக்கான முனைப்பு முகாம் திங்கள்கிழமை (ஜூன் 6) தொடங்குகிறது.

இதுகுறித்து ஜயங்கொண்டம் வேளாண் உதவி இயக்குநர் பழனிச்சாமி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

ஜயங்கொண்டம் பகுதியிலுள்ள பல்வேறு கிராமங்களில் குறுவை நெல் சாகுபடியை அதிகப்படுத்தும் நோக்கில் முனைப்பு முகாம்கள் ஜூன் 6 முதல் 15-ம் தேதி வரை நடத்தப்படவுள்ளன. இந்த முகாம்களில் மண் மாதிரி எடுத்தல், விதை நேர்த்தி செய்தல், எலி ஒழிப்பு, திருந்திய நெல் சாகுபடி ஆகிய செயல் விளக்கங்கள் செய்து காண்பிக்கப்பட உள்ளன.

இந்த முகாம்களில் வேளாண் அலுவலர்களும், சோழமாதேவி வேளாண் அறிவியல் மைய அலுவலர்களும் பங்கேற்று விவசாயிகளின் சந்தேகங்களுக்கு உரிய பதிலை அளிப்பர்.

குறுவை நெல் சாகுபடிக்கான முனைப்பு முகாம் திங்கள்கிழமை பிள்ளைபாளையத்தில் தொடங்குகிறது. தொடர்ந்து செவ்வாய்க்கிழமை குலோத்துங்க நல்லூரிலும், 8-ம் தேதி காடுவெட்டியிலும், 9-ம் தேதி உட்கோட்டை வடக்கு கிராமத்திலும், 10-ம் தேதி தேவிமங்கலம் கிராமத்திலும், 13-ம் தேதி உட்கோட்டை தெற்கு கிராமத்திலும், 15-ம் தேதி பிச்சனூர் கிராமத்திலும் நடைபெறும்.

எனவே, இந்தப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் முகாம்களில் பங்கேற்று பயனடைய வேண்டும் என்றார் அவர்.

**மேட்டூர் அணை இன்று திறப்பு**

First Published : 06 Jun 2011 10:22:33 AM IST

மேட்டூர், ஜூன். 5: காவிரி டெல்டா பாசனத்திற்காக, திங்கள்கிழமை (ஜூன் 6) மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

÷தமிழக பொதுப்பணித் துறை அமைச்சர் கே.வி. ராமலிங்கம், நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் பழனிசாமி ஆகியோர் அணையின் மேல்மட்ட மதகுகள் வழியாக காலை 10 மணியளவில் தண்ணீர் திறந்து விடுகின்றனர்.

÷அணையிலிருந்து நீர் திறக்கப்படுவதால், மேட்டூர் நீர் மின் நிலையங்களில் 375 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

தொடக்கத்தில் வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் நீர் திறக்கப்படும். பின்னர் படிப்படியாக வினாடிக்கு 12 ஆயிரம் கன அடி வரை அளவு அதிகரிக்கப்படும்.

÷மேட்டூர் அணையின் மூலம், திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், சேலம், நாமக்கல் உள்ளிட்ட 11 மாவட்டங்களில் 16.05 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.

÷ஆண்டுதோறும், ஜூன் 12-ம் தேதிதான் மேட்டூர் நீர் காவிரிப் பாசனத்திற்குத் திறந்து விடப்படும். ஆனால் நடப்பு ஆண்டில் அணையில் நீர் இருப்பு திருப்திகரமாக இருப்பதால் 6 நாள்களுக்கு முன்னதாகவே திறக்கப்படுகிறது.

÷இவ்வாறு முன்கூட்டியே பாசன நீர் திறக்கப்படுவது, நாடு விடுதலையடைந்த பிறகு இதுவே முதன்முறை என்பது குறிப்பிடத்தக்கது. இதனால் விவசாயிகள் குறுவைச் சாகுபடிக்கான ஆயத்தப் பணிகளைத் தொடங்கியுள்ளனர்.

**வேளாண் இடுபொருள்கள் வழங்கும் முகாம்**

First Published : 06 Jun 2011 10:27:31 AM IST

குடியாத்தம், ஜூன் 5: குடியாத்தம் வேளாண்மை அலுவலகம் சார்பில் கீழ்ப்பட்டி, ராமாலை, எர்த்தாங்கல் ஊராட்சிகளில் வேளாண் இடுபொருள்கள் வழங்கும் முகாம் சனிக்கிழமை நடைபெற்றது.

கீழ்ப்பட்டியில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு ஊராட்சித் தலைவர் எம்.ஆனந்தன் தலைமை வகித்து, விவசாயிகளுக்கு கைத்தெளிப்பான், நுண்ணூட்டச் சத்துக்கள், பயிர் பாதுகாப்பு மருந்துகள், மணிலா விதைகள் ஆகியவற்றை மானிய விலையில் வழங்கினார் .

குடியாத்தம் வேளாண்மை அலுவலர் ரவிக்குமார், வேளாண் துறையின் திட்டங்கள், செம்மை நெல் சாகுபடி முறை, காரிப் பருவத்துக்கான தொழில்நுட்ப ஆலோசனைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கினார். உதவி வேளாண்மை அலுவலர்கள் வெங்கடேசன், ஜெயக்குமார், சுந்தரமூர்த்தி, சரவணன், சிவசங்கர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ராமாலையில் ஊராட்சித் தலைவர் கோமதி தட்சிணாமூர்த்தியும், எர்த்தாங்கல் ஊராட்சியில் ஏரி பாசனத் தலைவர் சி.வெங்கடேசனும் விவசாயிகளுக்கு வேளாண் பொருள்களை வழங்கினர்.

**மர வளர்ப்பை ஊக்குவிக்க மானிய விலை மரக்கன்றுகள்**

First Published : 06 Jun 2011 10:21:37 AM IST

சேலம், ஜூன் 5: மர வளர்ப்பில் ஈடுபட பொதுமக்களை ஊக்குவிக்கும் வகையில் மானிய விலை மரக்கன்றுகள் வழங்கப்பட்டு வருவதாக மாவட்ட வன அலுவலர் சுகிர்தராஜ் கோயில் பிள்ளை தெரிவித்தார்.

÷உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, சேலம் குருவம்பட்டி வன உயிரியல் பூங்காவில் வனப்பாதுகாப்பு குறித்த நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. மாவட்ட வன அலுவலர் சுகிர்தராஜ் கோயில் பிள்ளை தலைமை வகித்தார். அப்போது அவர் பேசியது:

புவி வெப்பமடைதலைத் தவிர்க்க, அனைவரும் மரம் வளர்ப்பதன் முக்கியத்துவத்தை அறிந்து கொள்ள வேண்டும். இப்போது தமிழகத்தில் 18 சதவீத காடுகள் மட்டுமே உள்ளன. இதனை 33 சதவீதமாக மாற்ற அனைவரும் வீட்டிற்கு அருகில் உள்ள காலியிடங்களில் மரக்கன்றுகளை நட வேண்டும்.

÷மரம் வளர்ப்பதை ஊக்குவிக்கும் விதமாக, தமிழகத்தில் தனியார் நிலங்களிலும் மரம் நடும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்காக ஒவ்வொருவருக்கும் ஆயிரம் மரக்கன்றுகள் வீதம் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பொதுமக்கள் தம்மால் இயன்ற வரை மரங்களை நட வேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

÷விழாவில், உதவி வனப் பாதுகாவலர் பக்தவச்சலம், வனச்சரகர் பாஷா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**பயறு வகை பயிர்களை உற்பத்தி செய்ய அழைப்பு**

First Published : 06 Jun 2011 10:22:23 AM IST

செய்யாறு, ஜூன் 5: வெம்பாக்கம் வட்டாரத்தில் நடப்பு காரிப்பருவத்தில் விரைவுப்படுத்தப்பட்ட பயறு வகை உற்பத்தித் திட்டத்தின் கீழ் பயறுவகைப் பயிர்களை அதிக பரப்பளவில் பயிர் செய்து அதிக லாபம் பெற விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வெம்பாக்கம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கொ.பாண்டியன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

வெம்பாக்கம் வட்டாரத்தைச் சேர்ந்த பிரம்மதேசம், அரியூர், நாட்டேரி, சிறுவஞ்சிப்பட்டு, நெமிலி, பாவூர், புதுப்பாளையம், மாத்தூர், நரசமங்கலம், வயலாத்தூர், சுமங்கலி, அரசானைப்பாளையம், பெருமாந்தாங்கல் ஆகிய கிராமங்களில் சுமார் 350 ஹெக்டேர் அளவில் விரைவுப்படுத்தப்பட்ட பயறு வகை உற்பத்தித் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

வம்பன் 4 உளுந்து பயிரினை அதிக பரப்பளவில் பயிர் செய்து, உயரிய தொழில் நுட்பங்களை கடைபிடித்து, அதிக மகசூலாக ஹெக்டேருக்கு 1000 கிலோ பெறலாம். இத்திட்டத்தில் மானிய விலையில் உளுந்து விதை, உரங்கள், பூச்சிமருந்துகள் உள்ளிட்டவை வழங்கப்படும். வெம்பாக்கம் வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரை அணுகி பயனடையலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

**நீர்மட்டம்**

First Published : 06 Jun 2011 09:41:19 AM IST

பாபநாசம் 53.20 அடி 143.00 அடி

சேர்வலாறு 69.22 அடி 156.00 அடி

மணிமுத்தாறு 60.05 அடி 118.00 அடி

கடனாநதி 34.00 அடி 85.00 அடி

ராமநதி 43.00 அடி 84.00 அடி

வடக்கு பச்சையாறு 2.00 அடி 50.00 அடி கொடுமுடியாறு 15.00 அடி 52.50 அடி

அடவிநயினார் 43.00 அடி 132.00 அடி

பேச்சிப்பாறை 45.70 அடி 48.00 அடி

பெருஞ்சாணி 59.50 அடி 77.00 அடி

சிற்றாறு 1 11.28 அடி 18.00 அடி

சிற்றாறு 2 11.38 அடி 18.00 அடி

முக்கடல் 1.00 அடி 25.00 அடி

பொய்கை 18.30 அடி 42.45 அடி

**எலுமிச்சை செடிகளில் வேர்ப் புழுத் தாக்குதல்: கட்டுப்படுத்த விவசாயிகள் கோரிக்கை**

First Published : 06 Jun 2011 11:49:12 AM IST

சிவகங்கை, ஜூன் 5:÷சிவகங்கை மாவட்டம், சக்கந்தி ஊராட்சியில் எலுமிச்சை செடிகளில் வேர்ப் புழுத் தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த வேளாண்மைத் துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

÷தேவனிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் பலர் எலுமிச்சை சாகுபடி செய்துள்ளனர். மாதவன் என்ற விவசாயி மொத்தம் 7 ஏக்கரில் எலுமிச்சை சாகுபடி செய்துள்ளார். இவர், 2000-ல் பயிரிட்ட எலுமிச்சை மரங்கள் தற்போது பலனளிக்கத் தொடங்கியுள்ளன. கடந்த 4 ஆண்டுகளுக்கு முன் 2 ஏக்கரில் பயிரிடப்பட்ட பயிர்கள் அடுத்த ஆண்டு பலனளிக்கத் தொடங்கும் நிலையில் உள்ளது.

÷இந்நிலையில் அந்த 2 ஏக்கரில் உள்ள எலுமிச்சை செடிகளில் பரவலாக புழுத் தாக்குதல் காணப்படுகிறது. கட்டை விரல் அளவுக்கு உள்ள இந்தப் புழுக்கள் மண்ணுக்கு அடியில் வேர்ப் பகுதியை உண்டு சேதப்படுத்துகின்றன.

÷புழுத் தாக்குதலுக்கு உள்ளான செடிகளின் இலைகள் கரும்பச்சை நிறத்திலிருந்து வெளிர்பச்சை நிறத்துக்கு மாறிவிடுகின்றன. சிறிது நாள்களில் இலைகள் உதிர்ந்து செடி பட்டுப்போகிறது.

÷இதுகுறித்து மாதவன் கூறியதாவது: எலுமிச்சை தோட்டத்தில் சொட்டு நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்தியுள்ளேன். எலுமிச்சையைத் தாக்கும் புழுக்கள் ஒன்றரை அடி ஆழத்தில் உள்ளன. மண்ணுக்கு அடியில் இருப்பதால் அவற்றை கண்டுபிடிப்பதுசிரமமாக உள்ளது.

÷குருணை மருந்து இட்டால் இந்த புழு இறந்து விடுகிறது. ஆனால், மருந்து இடப்பட்ட இடத்தில் உள்ள செடி மஞ்சல் நிறமாக மாறி, வளர்ச்சி பாதிப்புக்குள்ளாகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த வேளாண் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

÷இதுகுறித்து சிவகங்கை மாவட்ட தோட்டக் கலை துணை இயக்குநர் எஸ். இருளப்பன் கூறியதாவது: இவை "ரூட்போரர்' எனப்படும் வேர்ப் புழுக்களாகும். இவற்றைக் கட்டுப்படுத்த, பாதிப்புக்குள்ளான செடிகளைச் சுற்றி பள்ளம் தோண்டி புழுக்களை எடுத்து மண்ணெண்ணெயில் போட்டு அழிக்க வேண்டும்.

÷அதோடு, ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு மி.லி. அளவு மோனோகுரோட்டோபாஸ் மருந்தைக் கலந்து புழுத் தாக்குதல் இருப்பதாக சந்தேகிக்கப்படும் செடிகளின் வேர்கள் நனையும் வகையில் பூவாளி மூலம் பரவலாக ஊற்றி விட வேண்டும். இது தொடர்பாக வேளாண் அறிவியல் மைய விஞ்ஞானிகள் ஆய்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

**மரக்கன்று நடும் விழா**

First Published : 06 Jun 2011 11:49:26 AM IST

சிவகங்கை, ஜூன் 5:÷காளையார்கோவில் அருகே உள்ள சூரக்குளத்தில் சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு கலைமகள் கல்வி மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அறக்கட்டளை சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

÷விழாவில், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மரக்கன்றுகளை நட்டனர்.÷நிகழ்ச்சியில், ஊராட்சி மன்றத் தலைவர் மதி, அறக்கட்டளை நிர்வாகி பத்மாவதி, சிவகங்கை ஜேசிஐ தலைவர் காளீஸ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமலர்

சென்ற 2010-11ம் நிதியாண்டில்தேங்காய் ஏற்றுமதி ரூ.537 கோடியாக உயர்வு

ஜூன் 07,2011,00:34



கொச்சி:சென்ற 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் தேங்காய் மற்றும் தேங்காய் பொருள்கள் ஏற்றுமதி, மதிப்பின் அடிப்படையில் 24 சதவீதம் வளர்ச்சி கண்டு 537 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. இது, கடந்த 2009-10ம் நிதியாண்டில், 432 கோடி ரூபாயாக இருந்தது.

சர்வதேச அளவில், தேங்காய் மற்றும் தேங்காய் பொருள்களுக்கான தேவை மிகவும் உயர்ந்துள்ளது. இந்நிலையில், உலகளவில், தேங்காய் உற்பத்தியில் முன்னணியில் உள்ள இலங்கையில், சென்ற ஆண்டு உற்பத்தி குறைந்ததால், அந்நாடு, உள்நாட்டு தேவையை கருத்தில் கொண்டு, ஏற்றுமதிக்கு தடை விதித்தது. இதனால், வளைகுடா மற்றும் இதர ஆசிய நாடுகளில், தேங்காய் தேவையை ஈடு செய்யும் வகையில், இந்திய தேங்காய் ஏற்றுமதி அதிகரித்துள்ளது என, தேங்காய் மேம்பாட்டு வாரியத்தின் உயரதிகாரி தெரிவித்தார்.

மதிப்பின் அடிப்படையில், சென்ற நிதியாண்டில், தேங்காய் ஏற்றுமதி அதிகரித்துள்ளது என்றாலும், இதர தேங்காய் பொருள்களின் ஏற்றுமதி குறைந்ததையடுத்து, அளவின் அடிப்படையில், இதன் ஏற்றுமதி, முந்தைய நிதியாண்டை விட, 8 சதவீதம் குறைந்து, 1 லட்சத்து 24 ஆயிரத்து 373 டன்னாக குறைந்துள்ளது. சர்வதேச அளவில், இந்திய தேங்காயின் அளவு மற்றும் தரம் நன்கு உள்ளதால், குறிப்பாக, வளைகுடா நாடுகளில், தேவை உயர்ந்துள்ளதாக தெரிய வந்துள்ளது.

உள்நாட்டில், அதிகளவு தேங்காய் உற்பத்தியாகும், கேரளாவிலும் இதன் உற்பத்தி குறைந்து போயுள்ளது. இதனால், தமிழ்நாட்டு தேங்காய் உற்பத்தியாளர்களுக்கு, நல்ல விலை கிடைத்து வருகிறது.கேரளாவில், கடந்த ஆண்டு தேங்காய் விலை 8 ரூபாய் என்ற அளவில் இருந்தது. இது, தற்போது 13 ரூபாயாக அதிகரித்துள்ளது. எனினும் ஏற்றுமதிக்கான தேங்காய், 10.50 ரூபாய்க்கு, வாங்கப்படுவதாக தேங்காய் மேம்பாட்டு வாரியம் மேலும் தெரிவித்துள்ளது.

**வேளாண்மை விற்பனை மையங்களில் ஜிப்ச மூட்டைகள்...வீண்**

பதிவு செய்த நாள் : ஜூன் 07,2011,01:23 IST

காஞ்சிபுரம் மாவட்டத்தில், துணை வேளாண்மை விற்பனை மையங்களில் வைக்கப்பட்டுள்ள ஜிப்சம் அடி உரங்கள் உரிய பாதுகாப்பு இல்லாததால், வீரியத் தன்மை குறைந்து வீணாகி வருகின்றன. காஞ்சிபுரத்தில் இருந்து 14 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது பரந்தூர் கிராமம். இங்கு விவசாயிகளின் பயன்பாட்டிற்காக துணை வேளாண்மை விற்பனை மையம் இயங்கி வருகிறது. பரந்தூர், கொட்டவாக்கம், புள்ளலூர், சாமந்திபுரம், வரதாபுரம், வளத்தூர், மேல்பெடவூர், மணியாட்சி, கோவிந்தவாடி அகரம், தண்டலம், பள்ளம்பாக்கம், புரிசை, இலுப்பை தண்டலம், நெல்வாய், தண்டலம், தொடூர், கள்ளிப்பட்டு, சிறுவாக்கம், காரை, சிறுவள்ளூர், நாகப்பட்டு ஆகிய கிராமங்களில் உள்ள விவசாயிகள் தங்களுக்கு தேவையான நெல் விதைகள், மணிலா, உளுந்து, பச்சைப்பயறு ஆகியவற்றை வாங்கி செல்கின்றனர். இங்கு விற்பனைக்காக வரும் யூரியா, ஜிப்சம் போன்ற அடி உரங்கள், வராண்டாவில் பாதுகாப்பற்ற நிலையில் வைக்கப்பட்டுள்ளன. இந்த உரங்கள் வீரியத் தன்மை இழந்துவிட்டதாக விவசாயிகள் கூறுகின்றனர். கடந்த ஆண்டு, விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்குவதற்காக 100 டன் ஜிப்சம் உரம் வட்டார வேளாண்மை விற்பனை மையத்தில் கொள்முதல் செய்தனர். இந்த உர மூட்டைகள் வேளாண்மை கட்டடத்திலும் மற்றும் புதிதாக சீரமைக்கப்பட்ட ஒன்றிய தொடக்கப் பள்ளி கட்டடத்தில் வைக்கப்பட்டுள்ளன. தற்போது வேளாண்மை மைய வளாகத்தில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள, இரண்டு டன் எடையுள்ள ஜிப்சம் உரமூட்டைகளும் கிழிந்துள்ளன. இதனால் ஜிப்சம் உரம் வீணாகியுள்ளது. இதேபோன்று மாவட்டத்தில் பெரும்பாலான வேளாண்மை விற்பனை மையங்களில் உரங்கள் பாதுகாப்பின்றி வைக்கப்பட்டுள்ளன. அதிகாரிகள் மெத்தனத்தால் வீணாகி வரும் உரங்களை விவசாயிகள் வாங்க மறுக்கின்றனர். இது குறித்து வாலாஜாபாத் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் முருகன் கூறும்போது: வாலாஜாபாத் வட்டார வேளாண்மை மையத்திற்கு, 200 டன் ஜிப்சம் உரமூட்டைகள் கொள்முதல் செய்யப்பட்டன. இதில் வாலாஜாபாத் வேளாண்மை மையத்தில் 100 டன் உர மூட்டைகளும்,

பரந்தூர் துணை வேளாண்மை மையத்தில் 100 டன் உரமும் அனுப்பி வைக்கப்பட்டது. வாலாஜாபாத் மற்றும் பரந்தூர் வேளாண்மை மையங்களில், கொள்முதல் செய்யப்பட்ட ஜிப்சத்தை உடனடியாக விவசாயிகளுக்கு விற்பனை செய்துவிட்டோம். எஞ்சிய 10 டன் ஜிப்சம் உர மூட்டைகள் மட்டும் பரந்தூர் துணை வேளாண்மை விற்பனை மையத்தில் வைத்துள்ளோம். தற்போது ஜிப்சம் வைப்பதற்கு இடம் இல்லாததால் வேறு கட்டடத்தில் வைத்துள்ளோம். இந்த உரம் நடப்பு பருவத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படும். ஜிப்சம் மூட்டைகள் கிழிந்திருந்தாலும் உரத்தின் தன்மை(வீரியம்) குறையாது. ஜிப்சம் உரம் என்பது மண்ணின் தன்மையை மாற்றி கொடுக்கும். இது வீரியம் கொண்ட உரம் இல்லை. எனவே விவசாயிகள் இது குறித்து கவலைப்பட வேண்டாம். இவ்வாறு அவர் தெரிவித்தார். காஞ்சிபுரம் மாவட்டத்தில், நூற்றுக்கணக்கான துணை வேளாண்மை விற்பனை மையங்கள் இயங்கி வருகின்றன. இங்கு விவசாயிகளுக்கு தேவையான நெல் விதைகள், பயறு விதைகள், விவசாய உபகரண கருவிகள் மானிய விலையில் வழங்கப்படுகிறது. ஆனால், இங்கு விற்பனைக்காக வரவைக்கப்படும் உரங்கள், விதைகள் போதிய பாதுகாப்பு இல்லாமல் மழையிலும், வெயிலிலும் காய்ந்து வருகின்றன. விவசாயிகள் இது போன்ற உரங்களை வாங்கிச் சென்றாலும், எந்த பயனும் இல்லை என கூறுகின்றனர்.

**மஞ்சள் விலை ரூ. 4,000 வரை சரிய வாய்ப்பு:குடோன்களில் குவியும் மூட்டைகள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 07,2011,02:30 IST

ஈரோடு: மஞ்சள் விளைச்சல் அதிகரிப்பு மற்றும் விலை வீழ்ச்சி காரணமாக தொடர்ந்து மஞ்சள் விலை குறைந்து கொண்டே வருகிறது. சென்ற வாரத்தை விட, நேற்று ஆயிரம் ரூபாய் குறைந்ததால், விவசாயிகள் விற்பனை செய்யாமல் குடோன்களிலேயே ஸ்டாக் வைத்து விட்டு சென்றனர். சென்றாண்டு தங்கத்துக்கு நிகராக மஞ்சள் விலை அமோகமாக விற்றது. நடப்பாண்டு மஞ்சள் சீஸன் சென்ற ஜனவரி மாதம் துவங்கியது. ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூடம், வேளாண்மை கூட்டுறவு மஞ்சள் சங்கம், வெளிசந்தை, கோபி சொசைட்டி ஆகிய மஞ்சள் சந்தைகளுக்கு புதிய மஞ்சள் வரத்து அதிகளவு வரத்துவங்கியது. ஆனால், 2011ம் ஆண்டு துவக்கத்தில் இருந்து மஞ்சள் சந்தைகளுக்கு வரத்து அதிகரிக்க துவங்கியதால், விலையும் படிப்படியாக குறைந்தது. விவசாயிகள் விலை குறைவால், மார்க்கெட்டிலேயே இருப்பு வைத்து நல்ல விலை கிடைக்கும் போது விற்பனை செய்து வந்தனர். சென்ற ஐந்து மாதங்களுக்கு முன் 16,569 ரூபாய்க்கு விற்ற மஞ்சள், தற்போது 5,779 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 10 ஆயிரத்து 790 ரூபாய் விலை சரிந்துள்ளது. போதிய விலை கிடைக்காததால், மார்க்கெட்டுக்கு எடுத்து வரும் மஞ்சளை, விவசாயிகள் குடோன்களில் இருப்பு வைக்கின்றனர். மார்க்கெட்டுக்கு வரத்தும் வெகுவாக குறைந்து வருகிறது. நேற்று, சென்ற வாரத்தை விட மஞ்சள் குவிண்டால் 1,109 ரூபாய்

குறைந்தது. நேற்று மார்க்கெட் நிலவரப்படி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விரலி மஞ்சள் குவிண்டால் 5,799 முதல் 7,761 ரூபாய், கிழங்கு 5,106ல் முதல் 6,779 ரூபாய்க்கு விற்பனையானது. சந்தைக்கு 286 மஞ்சள் மூட்டைகளில் 258 மூட்டைகள் விற்பனையானது. ஈரோடு சொசைட்டியில் விரலி 5898 முதல் 7,676 ரூபாய், கிழங்கு 5,568 முதல் 7,676 ரூபாய்க்கு விற்றது. 427 மூட்டைகள் வரத்தானதில் 287 மூட்டைகள் விற்பØØயானது. கோபி சொசைட்டியில் விரலி 5,827 முதல் 7,670 ரூபாய், கிழங்கு 5,769 முதல் 7,069 ரூபாய்க்கு விற்பனையானது. 237 மூட்டைகள் வரத்தானதில் அனைத்தும் விற்பனையானது. விலை வீழ்ச்சி மற்றும் விளைச்சல் காரணமாக நடப்பாண்டு 5,000 ரூபாய் வரை மஞ்சள் விலை போகும். அடுத்தாண்டு மேலும் வரத்து அதிகரிக்க உள்ளதால், 4,000 ரூபாய் மட்டுமே விலை கிடைக்கும் என மார்க்கெட் விற்பனைக் குழு நிர்வாகிகள் தெரிவிக்கின்றனர்.

**விதை நெல் விற்பனை மும்முரம்**

பதிவு செய்த நாள் : ஜூன் 07,2011,02:29 IST

கோபிசெட்டிபாளையம்: மேட்டூர் அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு காரணமாக, கோபி வேளாண் உற்பத்தி சங்கத்தில் இருந்து விதை நெல் அனுப்பும் பணி மும்முரமாக நடக்கிறது. டெல்டா பாசனத்துக்கு மேட்டூர் அணையில் இருந்து நேற்று தண்ணீர் திறக்கப்பட்டது. அணை நீர் மூலம் சேலம், ஈரோடு, நாமக்கல், கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை, பெரம்பலூர், கடலூர், நாகை உள்ளிட்ட 11 மாவட்டங்களில் 16.5 லட்சம் ஏக்கர் பாசன வசதி பெறுகிறது. மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதால், இன்னும் 10 முதல் 15 நாட்களில் நெல் நாற்று விடும் பணி துவங்கி விடும். இதையடுத்து, கோபி வேளாண் உற்பத்தி சங்கத்தில் விதை நெல் பேக்கிங் செய்து, டெல்டா மாவட்டங்களுக்கு அனுப்பும் பணி மும்முரமாக நடக்கிறது. கோபி வேளாண் உற்பத்தி சங்கத்தில் இருந்து தமிழகம் முழுவதும் விதை நெல் சப்ளை செய்யப்படுகிறது. மின்தடை மற்றும் ஆட்கள் பற்றாக்குறை போன்ற காரணத்தால் விதை நெல் உற்பத்தியில் சிறிதளவு தொய்வு ஏற்பட்டுள்ளது. வேளாண் உற்பத்தி சங்க அதிகாரி சாரநாதன் கூறியதாவது:

கோபி வேளாண் உற்பத்தி சங்கம் சார்பில் விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. நெல்லில் உள்ள கலப்படம், தரம் குறைவு போன்றவற்றை நீக்க, சங்கத்தில் உள்ள ஃபிரிக் கிளீனர் என்ற இயந்திரம் மூலம் நெல் தரம் பிரிக்கப்படுகிறது. தரமான விதை நெல் தினசரி 10 டன் உற்பத்தி செய்யப்படுகிறது. கோபி வேளாண் உற்பத்தி சங்கத்தில் ஏ.எஸ்.டி., ஏ.டி.டி.,-45, ஏ.டி.டி.,39, ஏ.டி.டி., 38, பி.பி.டி.,5204 (டீலக்ஸ் பொன்னி), ஐ.ஆர்.20, கோ.43 மற்றும் குண்டு ரகம் நெல் விதைகள் விற்பனை செய்யப்படுகிறது. தனியார் விதை நெல் உற்பத்தியாளர்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் நடப்பாண்டு விதை நெல் விலை

உயர்த்தப்படவில்லை. குண்டு ரக நெல் விதைக்கு மட்டும் கிலோவுக்கு 1 ரூபாய் உயர்த்தப்பட்டுள்ளது. மற்ற நெல் ரகம் சென்றாண்டு விலைக்கே நடப்பாண்டும் விற்பனை செய்யப்படுகிறது.
ஏ.எஸ்.டி., ஒரு கிலோ 25 ரூபாய், ஏ.டி.டி., 45 ரகம் 24 ரூபாய், ஏ.டி.டி., 39 ரகம் 24 ரூபாய், ஏ.டி.டி., 38 ரகம் 23 ரூபாய், பி.பி.டி., 5204 (டீலக்ஸ் பொன்னி) 26 ரூபாய், ஐ.ஆர்.20 ரகம் 24 ரூபாய், கோ.43 ரகம் 23 ரூபாய், குண்டு ரகம் 11 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஏப்ரல் மாதத்தில் இருந்து இதுவரை 255 டன் நெல் தமிழகம் முழுவதும் சப்ளை செய்யப்பட்டுள்ளது. சென்ற சில நாட்களில் டெல்டா பாசன பகுதிக்கு மட்டும் 30 டன் நெல் சப்ளை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**நேரடி கொள்முதல் நிலையம் செயல்படுமா? : விவசாயிகள் எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 07,2011,01:29 IST

பொன்னேரி : அரசு நிர்ணயிக்கும் விலைக்கு, நெல் மூட்டைகள் விற்பனை செய்ய, நேரடி கொள்முதல் நிலையங்கள் செயல்படுத்த வேண்டும் என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி, கும்மிடிப்பூண்டி உள்ளிட்ட பல பகுதிகளில் உள்ள பெரும்பாலான கிராமங்களில், விவசாயமே பிரதான தொழிலாக இருந்து வருகிறது. ஆண்டுக்கு சம்பா, குறுவை என இரண்டு முறை பயிரிடுபவர்களும், மழையை மட்டும் நம்பி ஆண்டுக்கு ஒருமுறை பயிரிடும் விவசாயிகளும் உள்ளனர். பருவம் தவறி வரும் மழை, விதை நெல் தட்டுப்பாடு, மின்தட்டுப்பாடு, உரத்தட்டுப்பாடு, வேலையாட்கள் பற்றாக்குறை என, பல்வேறு இன்னல்களுக்கு இடையே பெரும் சிரமத்துடன் விவசாயம் பார்த்து வருகின்றனர். அறுவடை செய்த நெல்லுக்கும் உரிய விலை கிடைப்பதில்லை. இதனால், விவசாயத்திற்கு செலவிட்ட தொகையை விட குறைவான வருவாயே கிடைக்கிறது. உழவு, நடவு, அறுவடை பணிகள் என, ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாய் வரை செலவு ஏற்படுகிறது. பருவம் தவறி வரும் மழையால் நெற்பயிர்கள் பாதிக்கப்பட்டு, குறைந்த அளவு சாகுபடியே கிடைக்கிறது. நெல் வியாபாரிகள் 75 கிலோ நெல் மூட்டைக்கு, 450 முதல் 550 ரூபாய் வரை விலை நிர்ணயம் செய்கின்றனர். அப்படியானால், ஏக்கருக்கு 9 முதல் 11 ஆயிரம் ரூபாய் வரை மட்டுமே கிடைக்கிறது. விவசாய பணிகளுக்கு செலவிட்டதை கணக்கிட்டால், 4,000 முதல் 6,000 ஆயிரம் ரூபாய் வரை நஷ்டமே ஏற்படுகிறது. நெல்லின் தரத்திற்கேற்ப இந்த விலை மாற்றத்தில் கூடுதலும், குறைவும் உண்டு. இதனால், விவசாயிகள் பெரும் இன்னலுக்கு ஆளாகி, விளைநிலங்களை வீட்டுமனைகளுக்கும், தொழில்நிறுவனங்கள் அமைவதற்கும் விற்று வருகின்றனர். விவசாயிகள் எதிர்பார்ப்பு: இது

குறித்து நத்தம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி உமாபதி கூறியது: "தஞ்சாவூர் மாவட்டத்தில் அரசு நிர்ணயிக்கும் நெல் மூட்டைகளை வாங்க நேரடி கொள்முதல் நிலையம் செயல்படுகிறது. இதனால், சன்ன ரக நெல்லுக்கு கொள்முதல் விலை கிலோ 11 ரூபாய் எனவும், குண்டு ரக நெல்லுக்கு 10 ரூபாய் எனவும் நிர்ணயம் செய்யப்படுகிறது. நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு, சன்ன ரக நெல் மூட்டைக்கு 825 ரூபாயும், குண்டு ரக நெல் மூட்டைக்கு 750 ரூபாயும் கிடைக்கிறது. இதனால், விவசாயிகளுக்கு லாபம் கிடைக்கிறது. மேலும், நெல்லின் தரம் எப்படி இருந்தாலும் நேரடி கொள்முதல் நிலையங்களில் ஒரே விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. ஆனால், திருவள்ளூர் மாவட்டத்திலேயே அதிக அளவில் நெல் விவசாயிகள், பொன்னேரி பகுதியிலேயே உள்ளனர். இப்பகுதியில் கொள்முதல் நிலையம் இல்லாததால், நெல் வியாபாரிகள் தங்களுக்குள் கூட்டணி வைத்து நெல் விலையை நிர்ணயம் செய்கின்றனர். விவசாயம் தழைக்கவும், விவசாயிகளின் உழைப்பு உரிய மரியாதை கிடைக்கவும் அரசு நிர்ணயிக்கும் விலைக்கு நெல் மூட்டைகளை விற்பனை செய்ய, ஒவ்வொரு தாலுகாவிலும் நேரடி கொள்முதல் நிலையங்கள் செயல்பட வேண்டும்' என்று கூறினார்.இது குறித்து சிவில் சப்ளை அதிகாரி ஒருவர் கூறுகையில் "திருவள்ளூர் மாவட்டத்தில் ஊத்துக்கோட்டை தாலுகாவில் மட்டும் நேரடி கொள்முதல் நிலையம் செயல்படுகிறது. போதிய இடவசதி இல்லாத காரணத்தால், மற்ற இடங்களில் கொள்முதல் நிலையங்கள் அமைப்பதில் சிரமம் உள்ளது' என்றார்.

**கரும்பு கட்டிங் ஆர்டர் கொடுப்பதில்...முறைகேடு : நஷ்டத்திற்கு ஆளாகும் விவசாயிகள்**

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2011,23:57 IST

கடலூர் : மாவட்டத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலைகள் காலம் தாழ்த்தி கரும்பு வெட்டும் ஆர்டர் கொடுப்பதால் ஏக்கருக்கு 6,000 ரூபாய் நஷ்டம் ஏற்படுகிறது. இதனை தவிர்த்திட மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்?என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். விவசாயமே பிரதான தொழிலாகக் கொண்ட கடலூர் மாவட்டத்தில் நெல் அதிக அளவு பயிரிடப்பட்டு வந்தது. தண்ணீர் பற்றாக்குறை, காலம் தாழ்த்திய பருவமழை மற்றும் ஆட்கள் கிடைக்காத காரணத்தினாலும், அதனையும் மீறி நெல் பயிரிட்டால் இயற்கை சீற்றங்களால் நஷ்டம் ஏற்பட்டு வந்தது. இந்நிலையில், மாவட்டத்தில் இயங்கி வரும் மூன்று தனியார் சர்க்கரை ஆலை மற்றும் ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகங்களும் கிராமங்கள் தோறும் சிறப்பு முகாம்களை நடத்தி கரும்பு பயிரிட்டால் கூடுதல் லாபம் பெறலாம் என பிரசாரம் செய்து வந்தனர். இதனால் நெல் உள்ளிட்ட பயிர்களை பயிரிட்டு தொடர்ந்து நஷ்டத்தை சந்தித்து வந்த விவசாயிகள் பணப்பயிரான கரும்பு பயிரிட துவங்கினர். விவசாயிகள் கரும்பு பயிரிடுவதற்கு முன்பாக அருகாமையில் உள்ள சர்க்கரை ஆலையில் பதிவு செய்து கொள்ள வேண்டும். அவ்வாறு

கடந்த ஆண்டு மாவட்டத்தில் மொத்தம் ஒரு லட்சத்து 12 ஆயிரத்து 192 ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. ஓராண்டு பயிரான கரும்பை நடவு செய்த 12வது மாதத்தில் வெட்டி ஆலைகளுக்கு அனுப்ப வேண்டும் என்பது விதிமுறை. இவ்வாறு செய்வதால் ஏக்கருக்கு சராசரியாக 30 டன் கரும்பு கிடைக்கும். ஆனால், மாவட்டத்தில் உள்ள தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகங்கள் தங்களிடம் பதிவு செய்த விவசாயிகளுக்கு உரிய காலத்தில் அதாவது 12 மாதம் முடிந்ததும் "கட்டிங் ஆர்டர்' தராமல் மூன்று முதல் நான்கு மாதங்கள் கழித்து கட்டிங் ஆர்டர் கொடுக்கின்றனர். இதனால் ஏக்கருக்கு சராசரியாக மூன்று டன் எடை குறைவு ஏற்படுகிறது. மேலும், கரும்பு கட்டிங் ஆர்டரை ஆலை நிர்வாகம் காலம் தாழ்த்தி தருவதால், கரும்புகள் வெயிலில் காய்ந்து முற்றி விடுவதால் அதனை வெட்ட கூடுதல் செலவாகிறது. முற்றிய கரும்புகளை வெட்ட வரும் தொழிலாளர்கள், கரும்பை கொளுத்திவிட்டுத்தான் வெட்டுகின்றனர். கொளுத்திய கரும்பை தனியார் ஆலைகள் டன் ஒன்றுக்கு 600 ரூபாய் பிடித்தம் செய்து கொள்கின்றனர். ஆனால் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் டன் ஒன்றுக்கு 150 ரூபாய் மட்டுமே பிடித்தம் செய்யப்படுகிறது. இதனை தவிர்த்திடவும், கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு நஷ்டத்தை தவிர்த்திட ஆலை நிர்வாகங்கள் உரிய காலத்தில் "கட்டிங் ஆர்டர்' பதிவு மூப்பு அடிப்படையில் வழங்க மாவட்ட நிர்வாகம் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இது குறித்து விவசாயிகள் கூறுகையில், தனியார் சர்க்கரை ஆலை நிர்வாகத்தினர் தங்களிடம் பதிவு செய்த விவசாயிகளுக்கு கட்டிங் ஆர்டரை கொடுக்காமல், வேறு மாவட்டத்தில் உள்ள தங்களது ஆலைக்கு பதிவு செய்த கரும்புகளை வெட்டி இங்கு கொண்டு வந்து அரவை செய்கின்றனர். மேலும், பிற ஆலை பகுதியில் நடவு செய்த கரும்புகளை எவ்வித அனுமதியின்றி கள்ளத்தனமாக வெட்டி வருகின்றனர். இவை அனைத்தும் முடிந்த பிறகு இங்கு பதிவு செய்த விவசாயிகளுக்கு "கட்டிங் ஆர்டர்'
கொடுப்பதால் நாங்கள் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகி வருவதாக கூறுகின்றனர். ஆலை நிர்வாகம் தரப்பில் கேட்டபோது, எங்கள் ஆலையின் அரவை திறனுக்கு ஏற்பவே கரும்பு பதிவு செய்கிறோம். ஒரு பருவத்திற்கு தேவையான அளவு கரும்பு பதிவு செய்து முடித்து பிறகும் ஏராளமான விவசாயிகள் கரும்பு பதிவு செய்ய வருகின்றனர். வேண்டாம் என்றாலும் விவசாயிகள் பிரச்னை செய்வதால் வேறு வழியின்றி அளவுக்கு அதிகமாக கரும்பை பதிவு செய்ய வேண்டியுள்ளது. இதன் காரணமாகவே "கட்டிங் ஆர்டர்' கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது. பிற மாவட்டத்தில் உள்ள ஆலைகளில் பதிவு செய்த கரும்புகளை சர்க்கரை ஆணையத்தின் அனுமதி பெற்றே இங்கு கொண்டு வந்து அரவை செய்யப்படுவதாக கூறினர்.

தாமதத்திற்கு காரணம்... : கரும்பு கட்டிங் ஆர்டர் தாமதமாவதால், கரும்பில் உள்ள நீர் சத்து நாளுக்கு நாள் குறைகிறது. இதனால் எடை குறைவு ஏற்படுகிறது. ஆனால் அதே நேரத்தில் கரும்புகளின் சர்க்கரை கட்டுமானம் கூடுகிறது. கட்டிங் ஆர்டர் தாமதத்தால் எடை குறைவினால்

விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும். அதே வேளையில் குறைந்த எடையில் அதிக சக்கரை கட்டுமானம் கொண்ட கரும்பு கிடைப்பதால் ஆலை நிர்வாகங்களுக்கு கணிசமாக லாபம் கிடைக்கிறது. இதன் காரணமாகவே ஆலை நிர்வாகங்கள், கட்டிங் ஆர்டரை காலம் தாழ்த்தி வழங்குவதாகக் கூறப்படுகிறது.

**மானிய விலையில் பசுந்தாள் உர விதைகள் விற்பனை**

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2011,23:50 IST

கடலூர் : பசுந்தாள் உர விதைகள் 50 சதவீத மானிய விலையில் வழங்கப்படுகிறது. இதுகுறித்து வேளாண் இணை இயக்குனர் இளங்கோவன் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: விவசாயிகள் பயிர் சாகுபடியில் பெருமளவு ரசாயன உரங்களை பயன்படுத்துவதால் மண்ணின் வளம் கெடுவதுடன், சுற்றுச்சூழலும் பாதிக்கிறது. மேலும், ரசாயன உரத்தின் விலையேற்றத்தால் சாகுபடி கூடுதலாகிறது. சாகுபடி செலவை குறைக்கவும், மண் வளத்தை பாதுகாத்திட இயற்கை உரங்களை அதிகளவில் பயன்படுத்த வேண்டும். தற்போது சம்பா நெல் சாகுபடி செய்ய உள்ள விவசாயிகள் சாகுபடி செய்வதற்கு முன் பசுந்தாள் உரங்களான சணப்பை அல்லது தக்கைப்பூண்டு போன்றவைகளை ஏக்கருக்கு 15 முதல் 20 கிலோ விதைப்பு செய்ய வேண்டும். அதனை 45 நாட்களுக்கு பிறகு அதனை மடக்கி உழவு செய்து அதன்பிறகு நடவு பணி செய்யலாம். இவ்வாறு செய்வதன் மூலம் மண்ணில் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை பெருகுவதுடன் மண் வளம் பாதுகாக்கப்படும். இதற்காக தேசிய வேளாண்மை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து வேளாண் விரிவாக்க மையங்களில் தக்கப்பூண்டு விதைகள் 50 சதவீத மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

**இலவம் பஞ்சு விலை அதிகரிப்பு**

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2011,23:45 IST

வருஷநாடு : கடமலை-மயிலை ஒன்றியத்தில் வருஷநாடு, வாலிப்பாறை, சிங்கராஜபுரம்,மேலப்பூசனூத்து, சாந்திபுரம், தும்மக்குண்டு, முருக்கோடை, காமராஜபுரம்,பாலசுப்பிரமணியபுரம், வாய்க்கால்பாறை, தங்கம்மாள்புரம், குமணந்தொழு, கோம்பைத்தொழு, கோரையூத்து ஆகிய மலைக் கிராமங்களில் பத்தாயிரம் ஏக்கர் பரப்பளவில் இலவம் பஞ்சு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்த மாதம் முதல்வாரத்தில் ஒரு கிலோ பஞ்சு

ரூ.49க்கு விற்பனையானது. கடந்த சில நாட்களாக ரூ.60 முதல் ரூ.64 வரை விற்கிறது. இதன் மூலம் இலவம் பஞ்சு விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**விவசாயத்துறையில் பெயர் மாற்றம் மீண்டும் திருந்திய நெல் சாகுபடி**

பதிவு செய்த நாள் : ஜூன் 06,2011,23:44 IST

தேனி : விவசாயத்துறையில் "ராஜராஜன் 1000' நெல் சாகுபடி முறையின் பெயர் மீண்டும், "திருந்திய நெல் சாகுபடி' என மாற்றப்பட்டுள்ளது. நெல் சாகுபடியில் அதிக விளைச்சல் பெற, கோவை விவசாய பல்கலை., கழகம் "திருந்திய நெல் சாகுபடி' முறையை அறிமுகம் செய்தது. இதன்படி, எக்டேருக்கு 10 ஆயிரத்து 260 கிலோ நெல் விளைவிக்க முடியும். இந்த நெல் சாகுபடி தொழில்நுட்பம் நடைமுறை படுத்தப்பட்ட போது, கடந்த ஆட்சியில் "அரசு செம்மை நெல் சாகுபடி' என அறிமுகம் செய்தது. இந்த சாகுபடி முறைக்கு விவசாயிகளிடையே வரவேற்பு கிடைத்தது. இந்நிலையில், "செம்மை நெல் சாகுபடி'க்கு, "ராஜராஜன் 1000 'என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. தற்போது அ.தி.மு.க., அரசு பொறுப்பேற்றதும், மீண்டும் "திருந்திய நெல் சாகுபடி' என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த பெயர் மாற்றம் குறித்து முறைப்படி அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை. வாய்மொழி உத்தரவு மூலமே விவசாயத்துறை அதிகாரிகள் "திருந்திய நெல் சாகுபடி' என விளம்பரம் செய்து, விவசாயிகளுக்கு விளக்கமளித்து வருகின்றனர்.

## வெளிநாடுகளில் தேவைப்பாடு உயர்வு இந்தியாவின் தேங்காய் ஏற்றுமதி ரூ.537 கோடியாக அதிகரிப்பு



*பி கே கிருஷ்ணகுமார்*

*கொச்சி*

*சென்ற 2010–11–ஆம் நிதி ஆண்டில் நாட்டின் தேங்காய் ஏற்றுமதி இதுவரை கண்டிராத வகையில் ரூ.537 கோடியாக உயர்ந்துள்ளது. முந்தைய நிதி ஆண்டில் இது ரூ.432 கோடியாக இருந்தது. ஆக தேங்காய் ஏற்றுமதியில் 24 சதவீதம் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.*

*அதேசமயம் அளவின் அடிப்படையில் இது 8 சதவீதம் சரிவடைந்து 1,24,373 டன்னாக குறைந்துள்ளது. இந்நிலையிலும் மதிப்பின் அடிப்படையில் ஏற்றுமதியில் வியத்தகு வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. இது இந்திய தேங்காய்க்கு வெளிநாடுகளில் நல்ல விலை கிடைத்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது.*

*இலங்கை*

*கடந்த நிதி ஆண்டுகளில் தேங்காய் ஏற்றுமதியில் இலங்கை முன்னிலை வகித்து வந்தது.*

இந்நிலையில் சென்ற நிதி ஆண்டில் இலங்கை அரசு தேங்காய் ஏற்றுமதிக்கு தடை விதித்தது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி இந்திய தேங்காய் ஏற்றுமதியாளர்கள், தேங்காய் ஏற்றுமதியில் அதிக கவனம் செலுத்தினர். வளைகுடா மற்றும் இதர ஆசிய நாடுகளுக்கு தேங்காய் ஏற்றுமதி சிறப்பான அளவில் அதிகரித்தது.

இதுகுறித்து ஆலிவ் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் முகம்மது அஷ்ரப் கூறுகையில், "நிறுவனம் குவைத் மற்றும் சவூதி அரேபியா போன்ற வளைகுடா நாடுகளுக்கு தேங்காயை அதிக அளவில் ஏற்றுமதி செய்துள்ளது. தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவில் தேங்காயை கொள்முதல் செய்கிறது" என்று தெரிவித்தார்.

விலை உயர்வு

சென்ற ஆண்டு வரை நிறுவனம் காய்கறிகள் ஏற்றுமதி வாயிலாக அதிக வருவாய் ஈட்டியது. தற்போது தேங்காய் ஏற்றுமதியில் கவனம் செலுத்தி வருகிறது. இந்தியாவில் தேங்காய் உற்பத்தியில் முன்னிலை வகிக்கும் கேரள மாநிலத்தில் உற்பத்தி குறைந்துள்ளது. இதனையடுத்து சென்ற ஆண்டில் ரூ.8 ஆக இருந்த ஒரு தேங்காய் விலை தற்போது ரூ.13 ஆக உயர்ந்துள்ளது. மொத்தமாக கொள்முதல் செய்யும் நிலையிலும் ஒரு தேங்காய் ரூ.10.50 என்ற விலையில்தான் கிடைக்கிறது என்று அஷ்ரப் மேலும் தெரிவித்தார். வெளிநாடுகளில் நல்ல விலை கிடைப்பதால் தேங்காய் ஏற்றுமதியாளர்கள் அதிக விலை கொடுத்து வாங்க தயங்குவதில்லை.

இதர நாடுகளுடன் ஒப்பிடும்போது இந்திய தேங்காய் எடையிலும், தரத்திலும் சிறந்து விளங்குகிறது. இதுகுறித்து ஃபேர் எக்ஸ்போர்ட்ஸ் இந்தியா நிறுவனத்தின் பொது மேலாளர் சாஜித் கூறுகையில் "இதற்கு முன்னர் ஏற்றுமதி செய்யும்போது 25 தேங்காய்களின் மொத்த எடை 14 கிலோவாக இருந்தது. இது தற்போது 22 கிலோவாக உயர்ந்துள்ளது. இது தேங்காயின் எடை உயர்ந்துள்ளதை எடுத்துக் காட்டுகிறது" என்று தெரிவித்தார்.

உற்பத்தி

சென்ற 2009–10–ஆம் பருவத்தில் 1.01 கோடி டன் தேங்காய் உற்பத்தியாகியுள்ளது. இதில் கேரளாவில் மட்டும் 39 லட்சம் டன் தேங்காய் உற்பத்தியாகியுள்ளது. ஆக தேங்காய் உற்பத்தியில் கேரளா முதலிடத்தில் உள்ளது. இம் மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழ்நாடு (34.20 லட்சம் டன்) இரண்டாவது இடத்திலும், கர்நாடகா (11.30 லட்சம் டன்) மூன்றாவது இடத்திலும் உள்ளது. நாட்டின் மொத்த தேங்காய் உற்பத்தியில் இந்த மூன்று மாநிலங்களின் பங்களிப்பு 83 சதவீதமாக உள்ளது.

## இயற்கை உர சாகுபடியை ஊக்குவிக்க பருப்பு, சர்க்கரை ஏற்றுமதியில் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன

இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

இயற்கை உரத்தைப் பயன்படுத்தி சாகுபடி பணிகளை மேற்கொள்வதை ஊக்குவிக்கும் வகையில் சில வேளாண் விளைபொருள்கள் ஏற்றுமதியில் மத்திய அரசு கட்டுப்பாடுகளை தளர்த்தியுள்ளது. இந்த வகையில் சர்க்கரை, பருப்பு மற்றும் சமையல் எண்ணெய் 10,000 டன் வரை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

ரசாயன உரங்கள்

ரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன்படுத்தாமல் கரும்பு, பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் போன்ற முக்கிய விளைபொருள்கள் சாகுபடியை மேம்படுத்த மத்திய அரசு முடிவு செய்துள்ளது. இவ்வகை விளைபொருள்களுக்கு மேலை நாடுகளில் தேவை உயர்ந்து வருகிறது. எனவே இத்தகைய பொருள்களின் ஏற்றுமதி மீதான கட்டுப்பாடுகளை நீக்கினால்தான் உள்நாட்டில் விவசாயிகள் இயற்கை உர சாகுபடியில் ஆர்வம் காட்டுவார்கள். எனவே மத்திய அரசு இவ்வகை பொருள்கள் மீதான கட்டுப்பாடுகளை தற்போது குறைக்க தொடங்கியுள்ளது. உதாரணமாக நடப்பு ஆண்டு செப்டம்பர் மாதம் வரை சமையல் எண்ணெய் வகைகளை ஏற்றுமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த தடை இயற்கை உர சாகுபடி மூலம் கிடைத்த எண்ணெய் வித்துக்களிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்க்கு பொருந்தாது என வெளிநாட்டு வர்த்தகத்திற்கான தலைமை இயக்குனரகம் தெரிவித்துள்ளது.

இதே போன்று சாதாரண சர்க்கரை ஏற்றுமதிக்கு தலைமை இயக்குனர் (சர்க்கரை) அலுவலகத்திலிருந்து விடுவிப்பு ஆணை பெற வேண்டும். ஆனால் இந்த விதிமுறை இயற்கை உர கரும்பின் மூலம் கிடைத்த சர்க்கரைக்கு பொருந்தாது. ஆண்டுதோறும் இயற்கை உர பருப்பு வகைகளை 10,000 டன் ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்படும் எனவும் இயக்குனரகம் கூறியுள்ளது.

பருப்பு ஏற்றுமதி

உள்நாட்டில் அளிப்பை அதிகரித்து, விலை உயர்வை கட்டுப்படுத்த கடந்த 2006–ஆம் ஆண்டில் மத்திய அரசு பருப்பு ஏற்றுமதிக்கு தடை விதித்தது. நடப்பு நிதி ஆண்டில் காபுலி ரக கொண்டைக் கடலை மற்றும் இயற்கை உர பருப்பு வகைகளை ஏற்றுமதிக்கு

தடையிலிருந்து விலக்கு அளித்துள்ளது.

விலை அதிகம்

பொதுவாக ரசாயன உரங்களை பயன்படுத்தி பெறப்படும் விளைபொருள்களை காட்டிலும் இயற்கை உர சாகுபடியில் கிடைக்கும் விளைபொருள்களின் விலை அதிகமாக உள்ளது. எனவே இன்றைய நிலையில் இவ்வகை பொருள்களைப் பயன்படுத்துவோர் குறைவாகத்தான் உள்ளனர். எனவே ஏற்றுமதிக்கான வாய்ப்புகளை அதிகரித்தால் உள்நாட்டில் இந்த சாகுபடி முறையில் பெரும் எழுச்சி ஏற்படும் என மத்திய அரசு கருதுகிறது.

## எதிர்காலத்தில் வளமான வாய்ப்பு இயற்கை உர கோகோவிற்கு வெளிநாடுகளில் வரவேற்பு



பி கே கிருஷ்ணகுமார்

கொச்சி

இயற்கை உரங்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட கோகோவிற்கு உலகம் முழுவதுமாக வரவேற்பு அதிகரிக்க தொடங்கியுள்ளது. குறிப்பாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இவ்வகை கோகோவால் தயாரிக்கப்பட்ட சாக்லேட் மற்றும் இதர உணவுப் பொருள்களை மக்கள் அதிகம் விரும்புகின்றனர். எனவே இயற்கை உர கோகோ சாகுபடியில் கவனம் செலுத்தினால் ஏற்றுமதிக்கான தேவை உயரும் என்றும், இப்பிரிவில் வளமான வர்த்தக வாய்ப்புகள் உள்ளன என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

உணவுப் பழக்கம்

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உணவுப் பழக்கவழக்கங்களில் பெரும்

மாறுதல் ஏற்பட்டு வருகிறது. இதனையடுத்து ரசாயன உரங்களைக் கொண்டு உற்பத்தியான வேளாண் விளைபொருள்கள் மீது அதிருப்தி உருவாகியுள்ளது. இவ்வகை பொருள்களால் உடல் நலனுக்கு தீங்கு விளைகிறது என்பதால் இயற்கை உரத்தால் உற்பத்தி செய்யப்படும் பயிர்களை மேல்நாட்டினர் பெரிதும் நாடத் தொடங்கியுள்ளனர். உணவுப் பொருள்களில் நச்சுத்தன்மை மற்றும் சுகாதாரம் குறித்த ஐயப்பாடுகளால் அமெரிக்கா போன்ற வளர்ச்சியடைந்த நாடுகள் பல்வேறு பொருள்களை தடை செய்து விடுகின்றன. அல்லது பொருள் குவிப்பு வரி போன்ற கட்டுப்பாடுகளை விதித்து இறக்குமதியை பெரிதும் கட்டுப்படுத்துகின்றன. இதனால் இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளின் வர்த்தகம் பாதிப்புக்குள்ளாகிறது. எனவே இனி வரும் காலங்களில் ஏற்றுமதியில் இயற்கை உர விளைபொருள்களின் பங்களிப்பு உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது மேலைநாடுகளின் கவனம் இயற்கை உர கோகோ மீது திரும்பியுள்ளது. இதனால் உருவாகும் வர்த்தக வாய்ப்பை கருத்தில் கொண்டு சுவிட்சர்லாந்து நாட்டு நிறுவனம் ஒன்று இந்தியாவிலிருந்து வாங்கிய இயற்கை உர கோகோவால் தயாரிக்கப்பட்ட சாக்லேட் ஒன்றை அறிமுகம் செய்துள்ளது. கேரளாவில் வாங்கிய கோகோவால் தயாரிக்கப்பட்ட சாக்லேட் ஒன்றையும் நம் நாட்டில் அறிமுகம் செய்துள்ளது. வளர்ந்து வரும் நாடுகளில் இவ்வகை சாக்லேட் பிராண்டுகள் பலவற்றை விற்பனை செய்து வருகிறது.

கேரள மாநிலம்

இன்றைய நிலையில் நம் நாட்டில் பெரும்பாலும் கேரள மாநிலத்தில்தான் இயற்கை உர கோகோ சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. குறிப்பாக கோட்டயம் மற்றும் இடுக்கி ஆகிய மாவட்டங்களில் அதிக சாகுபடி நடைபெறுகிறது. தற்போது இந்தியாவில் ஆண்டுக்கு 12,000 டன் கோகோ உற்பத்தியாகிறது. இதில் 10–20 சதவீதம் இயற்கை உரத்தால் உருவாவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. நாட்டின் கோகோ உற்பத்தியில் தென் மாநிலங்களின் பங்களிப்பே அதிகமாக உள்ளது.

தற்சமயம் இயற்கை உர கோகோ உற்பத்தியில் தென் அமெரிக்கா மற்றும் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகள்தான் முன்னிலை வகிக்கின்றன. இப்போது உலகில் விளையும் மொத்த கோகோவில் சுமார் 20 சதவீதம் இயற்கை உரத்தால் உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கான தேவை உயரத் தொடங்கியுள்ளதால் விரைவில் இது 30 சதவீதமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# குன்னூர் ஏல மையத்தில் ரூ.2 கோடி மதிப்புள்ள தேயிலை தூள் தேக்கம்

*குன்னூர், ஜூன்.7–*

*குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு கிராக்கி இல்லாததால் ரூ.2 கோடி மதிப்புள்ள தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.*

*ஏலம்*

*வாரந்தோறும் வியாழன், வெள்ளி இரு நாட்கள் தேயிலை வர்த்தகர் அமைப் பினர் நடத்தும் தேயிலை ஏலம் ஏல மையத்தில் நடை பெற்று வருகிறது. விற்பனை எண் 22–க்கான ஏலம் கடந்த 2,3 ஆகிய தேதிகளில் நடை பெற்றது.*

*ஏலத்திற்கு மொத்தம் 16 லட்சத்து 1 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில் 11 லட்சத்து 66 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 4 லட்சத்து 35 ஆயிரம் டஸ்ட் ரகமாகவும் இருந்தது.*

*விலை விழ்ச்சி*

*ஏலத்தில் உள்நாட்டு விற் பனை ஓரளவுக்கு இருந்தது. ஏற்றுமதியாளர்களை பொறுத்த வரை பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாட்டு வர்த்த கர்கள் தேயிலை தூளை குறைந்த அளவு வாங்கினர்.*

*ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு அதிகளவு கிராக்கி இல்லாததால் 3 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது. விலை வீழ்ச்சி காரணமாக 23 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.தேக்கம் அடைந்த தேயிலை தூளின் மதிப்பு 2 கோடியே 13 லட்ச ரூபாய் ஆகும்.*

*இலை ரக தேயிலை தூள்*

*சி.டி.சி. ரக தேயிலை தூளின் உயர்ந்த பட்ச விலையாக 137 ரூபாயாக இருந்தது.*

*ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் 193 ரூபாய் என்று உயர்ந்தபட்ச விலையாக இருந்தது.*

*இலை ரக தேயிலை தூளின் சராசரி விலையாக சாதாரண வகை 39 ரூபாயில் இருந்து 41 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 80 ரூபாயில் இருந்து 130 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 40 ரூபாயில் இருந்து 44 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 89 ரூபாயில் இருந்து 130 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*விற்பனை எண் 23–க்கான ஏலம் வருகிற 9, 10 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத் திற்கு மொத்தம் 16 லட்சத்து 47 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.*